1431
3-12-24
10-9-24

உ

ஸ்ரீ ராமஜெயம்

வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

மகாத்மா

# காந்தியடிகளின்

## ஜீவியசரித்திரக் கும்மியும், தேசீயக் கீதங்களும்

Office of the Registrar of Books, Madras

இஃது

கூடலூர் உபாத்தியாயர்
ம. க. வேலாயுதசெட்டியாரால்

இயற்றியதை,

கூடலூர் O. T.
ஸ்ரீ ஆறுமுகவிலாஸ் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1924 [அணா 0-1-0

NY
18106

ஸ்ரீராமஜெயம்

# மகாத்மா காந்தியடிகளின்
# ஜீவியசரித்திரக் கும்மியும்,
# தேசீயக் கீதங்களும்.

## வெண்பா.

அகஙிமுகனேன் யரனர் திருமகனே
முத்திக்கு வித்தாய் முளைத்தோனே-சித்திக்கும்
காந்திபுகழெடுத்திக்காசினியிலே யுரைக்க
வாய்ந்தமதி யெற்கருளுவாய்.

## திருவிருத்தம்.

பாரதப்புவியிலே யிந்துமுஸ்லீமெனும்
பல்லாயிரம் பேர்களும்
படுதுயரறிந்து சகலாத்தினர் குலத்திலே
பலகலையுணர்ந்த சுதனைய்
பேரியகாந்தியென்றவதாரமே செய்த
பேதமில்லாத மணியே
பெருமை பெருதொழிலினிது கதரிலே நூலினை
பெண்ணாண் சிசுக்கள் முதலோர்
கோரியனுதினமுமே நூற்றிடர் குடியதை
கொப்பென விடுப்பிராகில்
கொள்ளலாமதிக சுயராஜ்யவாழ்வினைக்
சொள்ளுநவீரென்ற மணியே
பூரதத்தேற்றியுன்னதிவினை தினைத்துளம்
புரிப்பதெங் காலமோ
புலவர்புகழருமணி குருமணி வரமணி
டன்னியர்சனிக்கு மணியே

# மகாத்மா காந்தியடிகளின் சரித்திரக்கும்மி.

1. கும்மியடித்திட வந்திடுவீரிந்த
குவலயமொன்றாக சேர்ந்திடுவீர்
நம்மவர்பஞ்சமகற்றவந்த கலி
நாதனைப் போற்றியடித்திடுவீர்

2. ஆதியில்ராக்கதரிம்சையொழித்திட
அயோத்திதசரதன் றன்மகனாய்
மேதினியிலவதாரஞ் செய்ராமனே
மேவியகாந்தியென் றேயறிவீர்

3. சீதையைராமன் மணந்தது போலொரு
கோதையைகாந்தி மகானிவரும்
வேதவிதிப்படியே மணந்தோங்கிட
வேள்விபுரிந்த வருமிவரே

4. ஆங்கிலமுற்றிலுங் கற்றிடவேநக
ராகியசீமையை நோக்கிடவே
தாங்கி சுமந்தீன்றதாயிவர் கொண்டதின்
தார்ப்பரிய மறிந்தே தடைப்பார்

5. அஞ்ஞானதேச மென்றேயறி வாளிகள்
யாவருங் கூறும் பெருஞ்சீமை
மெஞ்ஞான தேசம் விட்டேக வேண்டாமெந்தன்
மேன்மையுள்ள காந்திகண்மணியே

6. என்றுரைக்க மகான் காந்தியடிகளும்
ஏங்கித்துடித்து மனஞ்சலித்து
நன்றுமதுசொல்லை தட்டவில்லையானும்
நாடியபாரிஸ்டர் வேலையதில்

7. சென்றுபடித்து திறமடையவிடை
தீவிரமாய்த்தர வேண்டுமென
மன்றாடிக்கேட்ட மகன்முகம்நோக்கி
மதிமுகனேயொருவார்த்தையைக்கேள்

8. சொல்லுகிறேனென்று சொல்லுகிறாரந்த
சேர்ருறைநகர் சீமையிலே
அல்லும்பகலுங் குடித்திடுவார்கொலை
யஞ்சாமல்செய்து புசித்திடுவார்

9. அன்றியுங்காமிகளா யுன்னறிவை
கழித்திடுவாரந்த காரியத்தில்
வென்றுவருவேனென்றுணையிட்டால்தரு
வேன்விடையென்றனர் தாயவரும்

10. அன்னைமனமறிந்தே மகான்காந்தியும்
ஆணையிட்டு சொல்லுவாருமது
நன்னயமான மொழிதவறேனிதை
நம்பிடுந்தாயென்றுரைத்தனரே

11. பாலனுறுதிமொழி யதைக்கேட்டதும்
பக்குவமாய்விடை தந்தனரே
வாலவயதுடை காந்தியடிகள்
வணங்கிப்பயண முறைத்தனரே

12. சீர்மையில்சென்று படித்தனரே
சிறுபாலியரோடுங் குதித்தனரே
நேர்மையாய்பாரிஷ்டர் வேலையதில்மிக
நிபுணத்துவமடைந்தாரிவரே

13. இவ்விதமாக விருக்கையிலேயொரு
விஷ்டரெதிர்வந்து காந்தியிடம்
செவ்வையாய்ச்செய்த யென்வீட்டுவிருந்தினை
சேர்ந்துபுசித்திட "வாருமென்றார்

14. விருந்துக்கழைக்க சிநேகிதன்வார்த்தை
விரும்பியகாந்தியடிகளுமே
அருந்துவதாய் புறப்பட்டவர்வீட்டினில்
அமர்ந்தனர் நேயர்பலருடனே

15. பார்வையில் காந்திமகானெதிரில்பல
பாட்டில்சாராயம் வைத்திருந்தார்
மார்பைப்பிளந்து மசாலைக்கலந்திட்ட
மாமிசத்துண்டுகள் வைத்திருந்தார்

16. இத்தனைவைபவங் கண்டுவிட்டார்மகான்
எண்ணுதவெண்ணமுங் கொண்டுவிட்டார்
பித்தனைப்போலே மதிமயங்கிபெரும்
பிராந்தியடைந்தனராமிவரே

17. காந்தியுணவுகொள்ளாததை நேயரும்
கண்டுபலாத்காரமேபுரிய

நீங்கியிவரை விட்டே விடவேமன
இக்ஷ்பித்தே வெளிவந்தனராம்

18. அன்னைமொழி பரிபாலனஞ்செய்தனர்
அப்படியே சுபதேசம்வந்தார்
முன்னைவிதிப்படி தென்னாப்பிரிக்காதேசம்
முடிந்ததுபோக மகானிவரும்

19. அங்ஙனம்சென்றிவர் முற்றிலுஞ்சுற்றிட
வன்பர்களிந்து முஸ்லீமினர்கள்
சங்கமாய்ச்சேர்ந்து திரேகமெலிவுற
சார்ந்திட்டவேலையை செய்திருந்தார்

20. நேயர்பலருந்தவித் துழல்கின்றதை
நேரினிற்கண்ட மகானிவரும்
தாயோடுற வினர்தாரமுதலிய
தன்னருஞ்சேய்களை விட்டவரே

21. என்றுக்கதரியழுகிட காந்தியி
னன்புறுக யிருகண்களிலே
குன்றிலிருந்து விழுவதுபோல்ஜலம்
கொட்டினரேயுடல் முற்றிலுமே

22. இக்கடுகோரத்தை கண்டினிசும்மா
யிருப்பதழகல்ல வென்றறிந்து
தக்கமுயற்சிகள் செய்திடுவோமென
சாற்றினருணை யிட்டேயடிகள்

23. பாரதமக்கள் அயரமொழிக்க
படைத்தனனே யெனையீசனினி
வேரறுப்பேன்று யரென்றனரேகதர்
வெள்ளையிற்கங்கணம் கட்டினரே

24 பாலன்வேலாயுதம் பாடியகும்மியில்
பாதிவரலாறெடுத்துரைத்தேன்
சாலவுமற்றொரு பாதியிதன்பின்னர்
சாற்றிட குற்றம் பொறுப்பீரே

# தேசீய கீதங்கள்.

---

ராகம்: தேசிகதோடி - தாளம் ரூபகம்.

காந்திமகானிவர் தானே — அந்த

கடவுளனுப்பிய கருணாகரனென்னுமழகியமதிமக — காந்தி
கருத்திலுலகோர்படுதுயரிருத்தியகமேவுருகிய — காந்தி
சத்தியேபிரசங்கமாரி யெத்திசையுமேபொழிந்த — காந்தி

இந்தியர்முஸ்லீமொற்றுமையைநாடி
இங்கிலாந்தெங்கிலுமேமிகவோடி
வந்திடும் பஞ்சத்தை யோட்டிடத்தேடி
(சுருள்) வளப்பிரதாட்டினமதனை கொள்ளவென கரமதிலுதவிய (கா)

நம்மிவர்தேசமி லிளைந்திடும்பஞ்சதை
நாடியராட்டினந் தன்னில்கொடுத்ததை
செம்மையொடுநூலை நூற்றிடவாடையை [ண்
(சுருள்) செப்பருந்தரியதில் கொடுபலரொப்பிடு முறைபடிநெயவரு

பாலன் வேலாயுதம் பாடலைப்பார்த்து (கா)
பக்குவமாய்க்கதர் நூலினை நூர்த்து
ஆலமுள்ளமதுபானத்தை தவீர்த்து
(சுருள்) அழகியசதிபதி குதலையுமதிசுக மொடுதொழவிலகிய (கா)

---

நமக்குத்தாயெனும் சாரளாகேளி (என்ற மெட்டு)

கலிக்கப்பூமகள் நாரணன் போலிவர்
சாகுபிக்கொடுத்தருள்நாதன் ○ வெகு
சூக்ஷ்யருளிய நீதன்

அளிக்கும்பெரிருளை விலக்கமுயற்சி
ஆதியில்நம்மவர் செய்திட்டபயிற்சி
அற்புதமாகக் கைராட்டினஞ் சுழற்றி
நற்பொருள் மீட்டிடப்பாரும் யெவு
முற்பிரசங்கத்தில் கூறும்

காந்திமகான் வாக்கியத்தை கருத்தில் நினைந்தாக்கிடவே
கருதுமயலுடையதனை கடிந்துமனம் போக்கிடவே
சார்ந்துமூறுங்கதருடையை தாணியெலாமாக்கிடவே
சாரும்வறுமைநோயை தவிர்த்துசுகம் சேர்க்கிடவே
(சுருள்) சாலவுமேசிறுபாலன் வேலாயுதம் சாற்றியபாடலைப்பாரும்-
காந்தியை போற்றிடவாரும் [மகான்

## சாந்தகுண முடைய என்ற மெட்டு.

மெள்ளானு முகம்மதலி மாரன் ஷௌக்கதலி
மாநிலமெல்லாஞ் சுற்றியே வெகுப்பிரசங்கம்
செய்தார்களெங்கும் வெற்றியே [வென
(சருள்) மாதவராகிய நாதனுமருளிய போதனையாகிய சாதனை யிது
மாக்ஷிமையாயுரைத்தவர் கலியில்சுய
ஆக்ஷியையேவிரைத்தவர்
கைராட்டினத்தில் நூலைகாண வெல்லோரும்செய்து
காதலுடன் தரிக்கவே அயலுடையை
பாரில்பகிஷ்கரிக்கவே [தரும்
(சருள்) காரியமோடிதில் வீரியமாயினி காரியரோட்ருபேரிளமைக்
கண்டானந்தத்தில் மூழ்கவே காருண்யமகான்
விண்டாரெவரும் வாழ்கவே
சாருயபானமுதல் கோராதொழித்திடவே
சாற்றிபறையடித்தவர் நயமொழியால்
ஆற்றிசிறைவகித்தவர் [வனருள்பெற
(சருள்) சமரசமாவொருமமதையிலாதவர் குமரர்களாமிவருமைய
சாத்மீகஞானந்தாங்கியே புவியில்வெகு
ஆத்மானந்தமுமோங்கியே

## தில்லானு-டப்பா மெட்டு

கலியுகத்தினில் பொலிவுபெற்றிடக் காரணமாயவதாரமேசெய்
காருண்யமானவராம் ஜெகம்புகழ் [தருள்
நாரணன் தானிவராம்
காதலுடன் பல தேசமதிற்சென்று நீதிப்புரிகின்ற பேதமதைக்
கண்களில்நீர் சொரிந்தார் அங்கமதில் [கண்டு
புண்படவேயிருந்தார்
அரியவிந்தியர் பெரியவாழ்வினை யாங்கிலதேசத்திலோங்கிடச்
ஆறுதலாயினரே இந்தியர்க்கு [செய்ததை
தேருதல் கூறினரே
ஆதியில் வள்ளுவர்செய்த முறைப்படி மேதினியெங்கிலுஞ் சாத
அன்புடன் வந்தவராம் ராட்டினத்தை [னைசெய்திட
இன்புறத்தந்தவராம்
மதவிலக்கிடில் நிதிமிகுந்திடும் மாறுமலேயினையாராயுமென்ற
மாதவச்செல்வர்களே சுதந்திரப் [னர்
பாதையைக் கொள்ளுவீரே

## குமாரா குருபரா என்றமெட்டு.

மகாத்மா காந்தியின்பாதம் பணிகுவீர்
மாநிலத்தோரே
மகிழ்வோடிந்து முஸ்லீமா மிருவர்
மருவிவாழ்வீரே
கைராட்டினம் சுழற்றிவருவீரே யனுதினம்
களித்திடுவீரே
கதரையணிந்திடில் ராஜ்யம் சுயமாய்
காணலாம் நேரே
மௌலானா முகம்மதலியோடு உதவிட
மாரன் ஷௌக்கதலி
மகம்மதியர்க்காக புவிமேல்
மானமகன்றாரே
ஜெயிலில்படுகிறார் துன்பம் நமக்காய்
தெய்வமேதுணையாய்
ஜெகமீதறிந்துமறியாமல் சுகமாய்
திரிவதழகாமோ

## வாழிவிருத்தம்

காசினியோர்புகழ்கின்ற காந்திமுனிவாழியவே
பாசமிகுமவருடையபக்த ரெலாம்வாழியவே
ஆசையொடுகதராடை யணிபவர்கள் வாழியவே
நேசமிகுசுயராஜ்யம் நீடூழிவாழியவே.

முற்றிற்று.